# “முத்துமாரியம்மனும்” வல்வெட்டித்துறையும்!

By Thamilnee Pon Sivakaumaran

Valvai Amman

06th Nov2011

“முத்துமாரியம்மனும்”
வல்வெட்டித்துறையும்!.......

வல்வட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் திருவிழா வெகுவிமர்சையாக தொடர்ந்து நடைபெறுகிறது. கோவில் திருவிழாக்கள் ஒவ்வொரு வருடமும் வரும். இது சாதாரணநாட்களில் சாசுவதமானது ஆனால் இன்று ஈழத்தமிழர் எல்லாவற்றையும் இழந்துவிட்டு எதிர்கால வாழ்விற்கு வழிகாட்ட சிறு ஒளியுமின்றி எல்லோருமே இருட்டில் நின்று திகைக்கும் போது கோவில்திருவிழாக்கள்! அதுவும் வல்வட்டித்துறையில் கோலாகலத் திருவிழாக்கள் எப்படி? எப்படி?

வல்வட்டித்துறை, வல்வை இரண்டுமே ஒற்றைச்சுட்டிகள் தான்! ஆம் இரண்டு சொற்களும் குறிப்பது ஒன்றைத்தான். அது அந்தக் கடற்கரையோர நகரத்தை அல்ல பட்டினத்தை! அதனை நீங்கள் எப்படியும் கூறலாம். அது புவியியல் ரீதியில்! மட்டுமே. ஆனால் அது உண்மையல்ல.! அவை கூறுவது ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அச்சமூகத்தின் பண்பாட்டை கலாச்சாரத்தை இவைகளுடன் கலந்திருக்கும் இடைவிடாத உழைப்பை. அந்த மண்ணில் மனிதர்கள் வருவார்கள்! போவார்கள்! மகத்தான சாதனைகளைப் புரிவார்கள். அவை சரித்திரங்கள் ஆகும். ஆனால் அந்த மண்ணிற்கு ....... இவைகள் எல்லாம் சம்பவங்களே. இவை போல் ஆயிரம் சம்பவங்கள் அந்த மண்ணின் வரலாற்றில் உண்டு. அவை அதிகம் வெளியே தெரிவதில்லை ஏனெனில் வல்வை என்பது ஒற்றைக்குடும்பமானது. வீட்டிற்குள் நடப்பவை வீதிக்கு தெரியாது. ஒரு குடும்பம் தான் அங்கு சமூகம் சமுதாயம் எல்லாமே. வங்கக்கடலின் அலைகள் தினம் தினம் வல்வை மண்ணை மோதிப் பார்க்கும். திரும்பிப் போகும். ஆனால் மீண்டும் வரும் ஏனெனில் “அலைகள் ஓய்வதில்லை.” இது இயற்கை தந்த கொடை. இங்கிருந்து தான் வல்வை மண் பாடம் கற்றுக் கொண்டது. இப்படித்தான் “ஓயாத அலைகள்” இந்த மண்ணில் கரு ஆனது.

மண்ணின் மைந்தர்களுக்கும் இதுதான் வேதம். தினம் தினம் தாம் பார்க்கும் கடலலை போல இந்த மண்ணின் மக்களும் தமது கடமையில் இருந்து தவறுவதில்லை. சூரியஉதயத்தை எவ்வாறு தடுக்க முடிவதில்லையோ. அது போன்றதே இந்த மண்ணின் நாளாந்த நடவடிக்கைகள். அவை யாருக்காகவும் என்றும் நிற்கப் போவதில்லை. இவ்வாறுதான் இன்று வல்வட்டித்துறை முத்துமாரியம்மனின் கோலாகலத்திருவிழா நடைபெறுகிறது. அந்த மண்ணில் எழுதப்படாத சில விதிகள் எந்தசந்ததியினராலும் எப்பொழுதும் கைக்கொள்ளப்படுகின்றன. அவை கட்டயமாக கைக்கொள்ளப்பட வேண்டுமென்பதுதான் அந்த விதியில் அதிமுக்கியமானது. அந்த விதிகள் அந்த மண்ணில் குலதெய்வமான முத்துமாரியம்மனைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளன. என்பது தான் இங்கு அதிவிசேடமானது. அந்த மண்ணிண் மைந்தரே

# “முத்துமாரியம்மனும்” வல்வெட்டித்துறையும்!

By Thamilnee Pon Sivakaumaran

Valvai Amman

06th Nov2011

வல்வட்டித்துறைக்குள் வருவதற்கும் போவதற்கும் கூட முத்துமாரியம்மனின் திருவிழாக்காலங்களில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவை கண்ணிற்கு தெரிவதில்லை. ஆனால் காலம் காலமாக.........! 1942ம்ஆண்டுவரை வல்வெட்டித்துறையில் கடைப்பிடிக்கப்பட்டுவந்த “லோப்புச்சவர்” எனக்கூறப்படுவது எதனை? சித்திரைமாத முற்பகுதியிலேயே வல்வெட்டித்துறையின் அனைத்து கப்பலோட்டிகளும் கடலோடிகளும் ஊருக்குள் வந்துவிடவேண்டும். மாரியம்மனின் திருவிழாநாட்களில் ஊரில் இருந்து தமது நேர்த்திக்கடன்களை முடித்துவிட்டே ஊருக்கு வெளியே செல்லவேண்டும். அல்லது மாரியம்மனிடம் அனுமதிபெற்றே வெளிச்செல்லவேண்டும். இதனைமீறிச்செல்வோர் செல்லமுயல்வோர் அல்லது செல்லநினைப்போர்............இது எதனைக்காட்டுகின்றது. 21ம் நூற்றாண்டிலும் இது ஆச்சரியமானதுதான்.

முத்துமாரியம்மன் கோவிலில் திருவிழாவிற்கான கொடியேறிவிட்டால் பறைச்சத்தம் கோயிலில்மட்டும்தான் கேட்கும் இல்லை கேட்கவேண்டும். வேறிடங்களில் கேட்கக்கூடாது கேட்பதில்லை.அது அவளின் விருப்பம். ஆனால் சிலபத்து வருடங்களிற்கு முன்னால் அவளின் கலைகள் குறைக்கப்பட்டதன் பின் இன்று இம்முறையும்...............? தெய்வத்தின் சக்தியை மனிதன் குறைக்கலாமா? மந்திரங்களிற்கு அநதசக்தியுண்டா?........... ஆனால் எம் முன்னவர்கள் அவளையே நம்பினார்கள். அவளே கொடுத்தாள் அவளே தடுத்தாள்.

முத்துமாரியம்மன் வல்வெட்டித்தறைக்குள் மட்டுமே அருள்பொழிபவள் அல்ல. அந்தமண்ணின் மைந்தர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவளின் சக்தி அவர்களுக்கானது. இப்பொழுது அவள் திருவிழாநாட்களும் உலகம் முழுக்க ஒரேநாளில்........www.valvai.com ஊடாக அந்த மண்ணிற்குள் இருக்கும் வீரம்,தீரம்,தியாகம்,கடும்உழைப்பு இவைகளின் மூலஊற்று எல்லாமே மாரியம்மனின் கொடைகள்தான். ஒருமனிதனின் வெற்றிகளிற்கும் மற்றும் அவனின் பெருமைகளிற்குப் பின்னாலும் ஒருபெண் அது தாயாகலாம்! தாரமாகலாம்! எதுஎப்படியோ வல்வைமண்ணின் பெருமைகளிற்கும் அந்த மண்ணின்மைந்தர்களின் மகத்தான சாதனைகளிற்குப் பின்னாலும் அந்தத்தாய்தான். ஆம் அவள்தான் முத்துமாரியம்மன்............ விழுந்துவிடாவீரம்........மண்டியிடாமானம்......... இவை மட்டுமல்ல. எமக்கு எல்லாமே அவள்தந்தது........ எல்லாமே எமக்கு அவளால் வந்ததுதான்!........

“தமிழ்நீ”.பொன்.சிவகுமாரன்